கர்நாடக அரசு

செம்மொழித் தமிழ்

முதல் மொழி

CHEMMOZHI THAMIZH

FIRST LANGUAGE TAMIL

Part-2

2

©KTBS NOT TO BE REPUBLISHED

ஆம் வகுப்பு

STANDARD

KARNATAKA TEXT BOOK SOCIETY (R.)
6th Cross, Malleshwaram
Bangalore - 560 003.

பொருளடக்கம்

M9F5Q2

வரிசை எண்	பாடங்களின் பெயர்கள்	பக்கம்
13	ஆப்பு அசைத்த குரங்கு	1
14	மரம் வளர்ப்பேன் (பாடல்)	16
15	எலியும் பூனையும்	19
16	சிற்றெறும்பு (பாடல்)	31
17	முயல் குட்டியின் சந்தேகம்	37
18	டைனோசர்	49
19	ஓடிவிளையாடு பாப்பா (பாடல்)	55
20	முழுக்காலும் முக்காலும்	60
21	எறும்பும் புறாவும்	66
22	வீண் பெருமை	73
23	விடுகதைகள்	81
24	உலகநீதி	83

@KTBS NOT TO BE REPUBLISHED

13. ஆப்பு அசைத்த குரங்கு

அர்ச்சுனாபுரம் ஓர் அழகிய கிராமம். அவ்வூரில் ஒரு விறகு வெட்டி இருந்தான், காட்டுப் பகுதியை ஒட்டி இருந்தது அவனது குடிசை.

©KTBS NOT TO BE REPUBLISHED

மரங்களை வெட்டி வருவது, கோடாரியால் பிளப்பது, சிறு து ண்டுகளாக்கிப் பக்கத்துக் கி ராமங்களுக்குக் கொண்டு சென்று விற்பது, அவற்றைக் கொண்டு குடும்பம் நடத்துவது அவனது அன்றாட வேலைகள்.

அன்றும் அப்படித்தான் ஒரு பெரிய அடிமரத்துண்டைக் கோடாரியால் பிளக்க ஆரம்பித்தான்.

அவனுக்குக் களைப்பு வந்தது, அடி மரத்தைப் பாதியளவு பிளந்திருந்ததால் அப்பிளவுக்கு இடையில் 'ஆப்பு' போல ஒரு மரச்சக்கையை வைத்துவிட்டு நண்பனுடன் சாப்பிடச் சென்றான்.

பக்கத்திலேயே ஒரு பெரிய மரம் கப்பும் கிளையுமாக இருந்தது. அம்மரத்தின் கிளையில் இருந்த குரங்கு ஒன்று விறகு வெட்டியின் செயலைப் பார்த்துக் கொண்டிருந்தது. விறகு வெட்டி வீட்டுக்குச் சென்றதும் அக்குரங்கு உடனே இறங்கி வந்தது.



அம்மரத்தின் பிளவு பட்ட பகுதியில் தன்னுடைய வால் முழுவதும் விட்ட நிலையில் அதன்மேல் அமர்ந்து கொண்டது. அது குரங்கு அல்லவா! அதற்கே உரிய குரங்கு வேலையைச் செய்ய ஆரம்பித்தது.

@KTBS NOT TO BE REPUBLISHED

ஒரு ஆட்டு, இரண்டு ஆட்டு, மூன்று ஆட்டு, சில ஆட்டுகள் படுக்கென்று அந்த ஆப்புத் துண்டு கையோடு வந்து விட்டது சடாரென பிளவுபட்ட பகுதியின் இடைவெளி குறைந்து விட்டது. அத்துடன் பிளவுக்குள் தொங்கிய வால் மாட்டிக் கொண்டு நசுங்கியது. குரங்கு வலியால் வீல்-வீல் என்று அலறியது. சாப்பிடச் சென்று இருந்த

அடித்துக் கொண்டு ஓடிவந்து பார்த்தான், பாவம், குரங்கு வால் அறுந்து துடித்துக் கொண்டிருந்தது.

நீதி: குரங்கின் அசட்டுச் செயல் அதற்கே துன்பத்தைத் தந்து விட்டது.

திறன் : எழுதுதல் சரியான வடிவமைப்புடன் இடம் விட்டு எழுதுதல் .

பயிற்சிகள்

அ. வினாக்களுக்கு விடையளி :

1. விறகு வெட்டியின் கிராமத்தின் பெயர் என்ன ?

____

2. விறகு வெட்டியின் அன்றாட வேலைகள் யாவை ?

____

3. விறகு வெட்டி மரப்பிளவுக்கு இடையில் எதனை வைத்தான்?

____

4. மரத்தின் கிளையில் இருந்த குரங்கு எதைப் பார்த்துக் கொண்டிருந்தது ?

____

5. ஆப்பை அசைத்ததால் குரங்குக்கு ஏற்பட்ட துன்பம் யாது ?

____

©KTBS NOT TO BE REPUBLISHED

ஆ. சொற்களை இணைத்து வேறு வேறு தொடர்களை உருவாக்குக :-

மயில்	வேகமாக	ஆடும்
புலி	இருக்கும்	
முயல்	அழகாக	ஓடும்
பேருந்து	குதிரை	

1. ....
2. ....
3. ....
4. ....
5. ....
6. ....
7. ....

@KTBS
NOT TO BE REPUBLISHED

இ. எதிர்ச் சொற்களைக் கட்டத்திற்குள் வட்டமிட்டு எடுத்து எழுதுக :-

ச	இ	ர	வு	ந
த	கு	றை	வா	ன
ப	ள்	ள	ம்	ட
ய	ச	பெ	ரி	ய

1. அதிகமான X ....
2. மேடு X ....
3. பகல் X ....
4. சிறிய X ....

ஈ. சொற் கோபுரம் அமைக்கவும் :



1. பொருட்கள் வைக்க உதவுவது.
2. பார்க்க உதவுவது.
3. ஆற்றைக் கடக்க உதவுவது.
4. கடலில் செல்வது.
5. விழுதுகள் உடையது.

உ.செயல்பாடு :

இப்பாடலைப் பாடிப் பழகுக :-

அமைதி காத்திடு

நித்தம் நித்தம் பள்ளியிலே
நிறையப் பாடம் படித்திடலாம்

பள்ளியில் அமைதி காத்திடவே
படிப்பு தானாய் வந்துவிடும்.

எதற்கு இங்கே நாம் வந்தோம்
என்ற உணர்வை மறவாதே.

- குப்பல் நத்தம் செ. குருசாமி

அறிந்துகொள் :

மேகம் : நீர் நிலைகளில் உள்ள நீர் ஆவியாகி மேலே சென்று மேகமாக மாறுகிறது. இதன் மீது குளிர்ந்த காற்று பட்டவுடன் மழையாகப் பொழிகின்றது.

@KTBS NOT TO BE REPUBLISHED

ஊ. மாதிரியைப் பார்த்து வாக்கியங்களை திருத்தி எழுதுக :-

குரங்கு மரத்தில் வசித்தது.

குரங்கு மரத்தில் வசிக்கும்.

1. குரங்கு குதித்தது
2. மரத்தில் ஏறியது
3. ஆப்பை அசைத்தது
4. வால் நசுங்கியது
5. குரங்கு வால் அறுந்தது

எ. கட்டங்களை நிரப்பிப் படி

	வ				எ				
ந			அ				க		டி
					ம்				
	கு		வி			ற்	று		
	ரை								

©KTBS NOT TO BE REPUBLISHED

எ. எழுதிப் பழகுக.

அர்ச்சுனாபுரம் ஓர் அழகிய கிராமம்

@KTBS
NOT TO BE REPUBLISHED

விறகு வெட்டியின் செயலை குரங்கு பார்த்தது.

@KTBS
NOT TO BE REPUBLISHED

பிளவுக்குள் குரங்கின் வால் நசுங்கிவிட்டது.

@KTBS
NOT TO BE REPUBLISHED

1செயல்பாடு

கப்பல் செய்வோம்.

@KTBS
NOT TO BE REPUBLISHED

உங்கள் ஆசிரியரின் உதவியைக் கொண்டு வெவ்வேறு விலங்குகளின் முகமூடிகளைத் தயாரித்து அணியவும்.

இலை ஊதல் செய்வோம்.

@KTBS
NOT TO BE REPUBLISHED

கடிதம்
(தந்தைக்கு எழுதுதல்)

பெங்களூரு,
04.05.2016

அன்புள்ள அப்பாவுக்கு,

வணக்கம், நலம் நலமறிய ஆவல்! இங்கு நானும் நண்பர்களும் நலம். அங்கு நீங்கள், அம்மா அண்ணன், அக்காள், தம்பி தங்கையரின் நலன் அறிய விழைகிறேன். நான் இங்கு நன்கு படித்து வருகிறேன் ஆசிரியர்களும் நல்ல முறையில் கல்வி கற்பிக்கின்றனர்.

இந்த ஆண்டு பிப்ரவரித் திங்கள் 15 ஆம் நாள் இவ்வாண்டுக்குரிய பள்ளி ஆண்டு விழா கொண்டாடத் தலைமை ஆசிரியரும் மற்றவர்களும் ஏற்பாடு செய்துள்ளனர். போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசளிப்பு, கலை நிகழ்ச்சி உட்பட பல நிகழ்ச்சிகள் இவ்விழாவில் நடை பெற உள்ளன. நானும் பல போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்றுள்ளேன். மாண்புமிகு கல்வி அமைச்சரின் கரங்களால் பரிசு பெற உள்ளேன். இந்நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்க நீங்கள் அனைவரும் இங்கு வரும்படி அன்புடன் அழைக்கிறேன்.

@KTBS NOT TO BE REPUBLISHED

உங்கள் அன்புள்ள
முருகன்

பெறுநர்
சுரேஷ்மூர்த்தி
நெ 43, என். சி காலனி,
துங்கபத்திரா அணைக்கட்டு,
பள்ளாரி மாவட்டம்.

விடுப்பு விண்ணப்பம்

ஜோகுபாளையம்
பெங்களூரு - 8,

04-05-2016

பெறுநர்,

வகுப்பாசிரியர்,
இரண்டாம் வகுப்பு,
மாநகரத் துவக்கப்பள்ளி,
ஜோகுபாளையம், பெங்களூரு - 8

ஐயா,

நேற்று இரவு முதல் நான் குளிர் காய்ச்சலால் மிகவும் அவதிப்படுகிறேன். என்னால் இன்றும் நாளையும் பள்ளிக்கு வர முடியாது. ஆகையினால் தாங்கள் அருள் கூர்ந்து இரண்டு நாட்கள் (04-05-2016 மற்றும் 05-05-2016) விடுப்பு அளிக்குமாறு பணிவன்புடன் வேண்டுகிறேன்.

நன்றி,

தங்கள் பணிவுள்ள மாணவி,
வள்ளி

விடுநர்,
நா, கிருட்டிணமூர்த்தி
இரண்டாம் வகுப்பு,
மாநகரத் துவக்கப்பள்ளி,
ஜோகு பாளையம்,
பெங்களூரு - 8

© KTBS NOT TO BE REPUBLISHED

படித்தறிக :

விடுப்புக் கடிதம்

அன்புடைய ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம்
இன்று காலை முதல் தலைவலியால் அவதிப் படுகிறேன் ஆகவே பள்ளிக்கு வரமுடியவில்லை.
அதனால் இன்று ஒரு நாள் மட்டும் விடுப்பு தர வேண்டுகின்றேன்

- இப்படிக்கு
பணிவுள்ள தங்கள்

@KTBS
NOT TO BE REPUBLISHED

மாங்காய் படம் வரைவோமா !



@KTBS
NOT TO BE REPUBLISHED

வண்ணம் தீட்டுக

14. மரம் வளர்ப்பேன்

R7T7R1

தாத்தா வைத்த தென்னையுமே
    தலையால் இளநீர் தருகிறது.
பாட்டி வைத்த கொய்யாவும்
    பழங்கள் நிறையக் கொடுக்கிறது.
அப்பா வைத்த மாஞ்செடியோ
    அல்வா போலப் பழம் தருது
அம்மா வைத்த முருங்கையுமே
    அளவில்லாமல் காய்க்கிறது.
அண்ணன் வைத்த மாதுளையோ
    கிண்ணம் போல பழுக்கிறது,
சின்னஞ் சிறுவன் நானுமொரு
    செடியை நட்டு வளர்ப்பேனே.

- அழ. வள்ளியப்பா

NOT TO BE REPUBLISHED ©KTBS

அ. பொருத்திப் படி : எழுது.

தாத்தா அப்பா அம்மா அண்ணன் பாட்டி	கொய்யா தென்னை மாஞ்செடி முருங்கை மாதுளை	நட்டார்

எ-டு 1. தாத்தா தென்னை நட்டார்

2.

3.

4.

5.

@KTBS NOT TO BE REPUBLISHED

ஆ. குழுவில் சேராததை வட்டமிடுக.

1. தென்னை, பனை, கொய்யா, பாக்கு
2. மா, பலா, வாழை, கோவைப்பழம்
3. அப்பா, அம்மா, அண்ணன், மாமா
4. லட்டு, மைசூர்ப்பாக்கு, வடை, பாதுஷா.

இ. மீன் விழுங்கியதைக் கண்டுபிடித்து எழுது



ஆரஞ்சு ....

....

@KTBS
NOT TO BE REPUBLISHED

15. எலியும் பூனையும்.

D5A6L8

ஒரு பூனைக்கு அதிகப் பசியாக இருந்தது. அது உணவுக்காக அங்கும் இங்கும் அலைந்தது. அப்போது அங்கொரு எலியைக் கண்டது. உடனே அதன் மேல் தாவீ எலியைப் பிடித்துக் கொண்டது. இரண்டும் பேசிக் கொண்டன.

©KTBS NOT TO BE REPUBLISHED

பூனை : ஆஹா ! நண்பனே ! என் கையில் அகப்பட்டுக் கொண்டாயல்லவா !

எலி : என்னை எதற்காகப் பிடித்தீர்கள் ? நான் உங்களுக்கு என்ன தீங்கு செய்தேன் ?

பூனை : இல்லை, நீ ஒன்றும் செய்யவில்லை. ஆனால் இப்போது எனக்குப் பசியாக இருக்கிறது. உன்னைச் சாப்பிட வேண்டும் போல இருக்கிறது.

எலி : நீங்கள் ஒரு நல்ல பூனையல்லவா ?

பூனை : ஆமாம், அதற்கென்ன ?

எலி : நல்லவர்கள்
எப்போதும்
சாப்பிடுவதற்கு
முன்பு
முகத்தைக்
கழுவிக்
கொள்வார்கள்.
முகம்
கழுவாமல்
நீங்கள்
என்னைச் சாப்பிடுவீர்களா ?

பூனை : இல்லை, இல்லை. முகம் கழுவிக் கொள்கிறேன் (பூனை எலியைக் கீழே விட்டது, முகம் கழுவச் சென்றது).

எலி : (சர்ரென ஓடிக்கொண்டு) வணக்கம் ! பூனை மாமி போய் வருகிறேன்.

பூனை : மோசக்கார எலி ! ஏமாற்றி விட்டது. எனக்கும் ஒரு பாடம் புகட்டியது. இன்றிலிருந்து நான் எலிகளைப் பிடித்துத் தின்ற பிறகே முகம் கழுவிக் கொள்வேன்.

(அன்று முதல் பூனைகள் எலிகளைப் பிடித்துத் தின்ற பிறகே தங்களுடைய முகங்களை துடைத்துக் கொள்கின்றன.)

NOT TO BE REPUBLISHED @KTBS

பயிற்சி

அ. கீழ்வரும் வினாக்களுக்கு விடைதருக

1. பசித்த பூனைக்கு உணவாகக் கிடைத்தது என்ன ?

____

____

2. எலி பூனையைப் பார்த்துச் சாப்பிடுவதற்கு முன்பு என்ன செய்ய வேண்டும் என்றது ?

____

____

3. எதற்காக பூனை எலியைப் பிடித்தது ?

____

____

4. மோசக்கார எலி பூனையை என்ன செய்தது ?

____

____

@KTBS NOT TO BE REPUBLISHED

ஆ. பின் வரும் சொற்களைப் படிக்கவும்.

1. அங்கும் ←——— இங்கும்
2. அங்கொரு
3. அகப்பட்டு
4. வணக்கம்
5. புகட்டியது
6. இன்றிலிருந்து

இ. கீழ்வரும் சொற்றொடர்களைச் சேர்த்து எழுதுக :

1. அங்கும் + இங்கும் ....
2. அங்கு + ஒரு ....
3. கொண்டாய் + அல்லவா ....
4. இன்றில் + இருந்து ....
5. கழுவி + கொள்வேன் ....

ஈ. விடுபட்ட இடத்தில் தகுந்த சொற்களை நிரப்புக :-
(அதிக, உணவுக்காக, எலியைக், தாவி, அலைந்தது)

1. ஒரு பூனைக்கு .... பசியாக இருந்தது. அது .... அங்கும் இங்கும் .... அப்போது அங்கொரு .... கண்டது. அதன் மேல் .... எலியைப் பிடித்தது.

உ. எலியின் ஆசை

யானை மேலே ஏறிச் சென்று
நகரைச் சுற்ற ஆசை
பூனை மேலே ஏறிச் சென்று
புலியைப் பிடிக்க ஆசை
நீலக் கடலில் நித்தம் நித்தம்
நீந்தி மகிழ ஆசை
வண்ணச் சிறகை அடித்து மேலே

வானில் பறக்க ஆசை
மின்னித்திரியும் மின் மினி போல
விண்ணில் திரிய ஆசை
வெண்ணிலாவைப் பிடித்து வந்து
வண்ணம் தீட்ட ஆசை
தம்பி உனக்கு என்ன செய்ய ஆசை ?

NOT TO BE REPUBLISHED @KTBS

ஊ. எழுத்துக்களை மாற்றிச் சொல்லைச் சரிசெய்க :

உ	வு	ண	....
மு	ம்	க	....
உ	னே	ட	....
ஆ	ல்	னா	....
மு	பு	ன்	....
தி	று	ன்	....
அ	று	ன்	....
கை	ல்	யி	....
இ	லை	ல்	....

எ. விடுபட்ட எழுத்தைத் கண்டு பிடிக்கவும்.

உ		வு

பூ	

ந	ண்		ன்

வ		க்	க	ம்

தா	

ஏ. எழுத்துக்களை இணைத்துச் சொற்களை உருவாக்குக.



....

....

....

....

....

....

....

@KTDS
NOT TO BE REPUBLISHED

ஐ. உன் வீட்டில் வளரும் ஒரு செல்லப் பிராணியைப் பற்றி எழுதுக.

____

____

____

____

ஒ. கோடிட்ட இடத்தை நிரப்புக : -

பூனை .... பிடிக்கும்

நாய் .... துரத்தும்

ஆந்தை .... விழித்திருக்கும்

எலி .... வாழும்.

பாடிப்பழுகுக : -

மியாவ் மியாவ் பூனை
மீசைக்காரப் பூனை !

கொட்டுக் காலுப் பூனை
கொள்ளிக் கண்ணுப் பூனை !

எட்டித்தாவி விரைவிலே
எலி பிடிக்கும் பூனை !

பண்டம் உருட்டும் பூனை
பாலைக் குடிக்கும் பூனை !

மியாவ் மியாவ் பூனை
மீசைக்காரப் பூனை .

@KTBS NOT TO BE REPUBLISHED

வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்

ஒ. எழுதிப் பழகுக.

ஆகா ! நண்பனே! என் கையில்

@KTBS
NOT TO BE REPUBLISHED

அகப்பட்டுக் கொண்டாயல்லவா ?

@KTBS
NOT TO BE REPUBLISHED

சாப்பிடுவதற்கு முன்பு முகத்தைக்

@KTBS
NOT TO BE REPUBLISHED

கழுவிக் கொள்வார்கள்

ஔ. கிழ்க்கண்ட எண்களை இணைத்து, அதன் பெயரை எழுதுக.

©KTBS
NOT TO BE REPUBLISHED

க. விடுபட்ட எழுத்துக்களை எழுதி வார்த்தைகளை உருவாக்குக :-



@KTBS
NOT TO BE REPUBLISHED

கா. குழுவில் சேராததை வட்டமிடுக.

@KTBS NOT TO BE REPUBLISHED

16. சிற்றெறும்பு !

E9M2R9

NOT TO BE REPUBLISHED @KTBS

பையன் : சிற்றெறும்பே ! சிற்றெறும்பே !
செல்வதெங்கே சொல்லுவாய் ?

சிற்றெறும்பு : புற்றை நோக்கிப் போகிறோம்
பொழுது வீழப் போவதால் !

பையன் : பற்றிக்கொண்டு செல்வதென்ன ?
பாடுபட்ட செல்வமோ ?

சிற்றெறும்பு : குற்றிவைத்த அரிசி மாவின்
குறுநொய் கொஞ்சம் கிடைத்ததே!

பையன்	:	கூட்டிவைக்கும் செல்வம் யாவும்
		கொட்டிக் காப்ப தெங்கேயோ ?
சிற்றெறும்பு	:	வீட்டையொன்று கட்டி வைத்து
		வேலி போட்ட புற்றிலே !
பையன்	:	மேட்டின் மீது புற்றை நீங்கள்
		கட்டி வைத்த தென்னவோ ?
சிற்றெறும்பு	:	ஈட்டி வைத்த கூலம்யாவும்
		ஈரஞ் சேரா திருக்கவே !
பையன்	:	ஒன்று பின்னை ஒன்றாய்ப் போகும்
		ஒழுக்கம் கற்ற தெங்ஙனம் ?
சிற்றெறும்பு	:	நன்று கேட்டாய் ! எவ்வுயிர்க்கும்
		நல்லொழுங்கே வாழ்க்கையாம் !
பையன்	:	குன்று போலக் குவித்த செல்வம்
		கூடியுண்ப தெங்ஙனம் ?
சிற்றெறும்பு	:	ஒன்றி வாழ்வு யாவும் வாழ
		உண்டு செல்வம் உலகிலே !
பையன்	:	சேர்ந்து யாவும் கூடியுண்டால்
		செல்வம் தீர்ந்து போகுமே ?
சிற்றெறும்பு	:	தீர்ந்து போகில் யாவுங் கூடி
		ஊர்ந்து சென்று சேர்ப் போமே !
பையன்	:	கூர்ந்து சொல்வாய் ! உங்கள் வாழ்வில்
		குத்துச் சண்டை தோன்றுமோ ?
சிற்றெறும்பு	:	நேர்ந்ததில்லை ! நேர்வதில்லை !!
		நாங்கள் எல்லாம் ஓரினம் !

- பெருஞ்சித்திரனார்.

© KTBS NOT TO BE REPUBLISHED

அ. வினாக்களுக்கு விடை எழுதுக :

1. சிற்றெறும்பு எங்குச் சென்றது ?

2. எறும்பு எதைப் பற்றிக் கொண்டு செல்கிறது ?

3. எறும்பு கூட்டி வைத்த செல்வத்தைக் காப்பது எங்கே ?

4. எல்லா உயிர்க்கும் எது வாழ்க்கை ?

5. கூடியுண்டால், செல்வம் தீர்ந்து போனால் எறும்புகள் என்ன செய்யும் ?

6. எறும்புகளின் வாழ்க்கையில் குத்துச் சண்டை தோன்றுமோ ?

@KTBS NOT TO BE REPUBLISHED

ஆ. பிரித்தெழுதுக

1. சிற்றெறும்பு = ...
2. பற்றிக் கொண்டு = ...
3. காப்பதெங்கு = ...
4. ஈரஞ்சேரா = ...
5. நல்லொழுங்கு = ...

இ. சேர்த்தெழுதுக :

1. கூடி + உண்பது = ...
2. ஓர் + இனம் = ...
3. நேர்ந்தது + இல்லை = ...
4. நேர்வது + இல்லை = ...
5. ஓர் + இனம் = ...

ஈ. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. புற்றை .... போகிறோம்.
2. குறு நொய் .... கொஞ்சம் கிடைத்ததே.
3. எவ்வுயிர்க்கும் .... வாழ்க்கையாம்.
4. கூடியுண்டால் .... தீர்ந்து போகுமே.
5. நாங்கள் எல்லாம் ....

உ. துணை எழுத்துக்களைச் சேர்த்துப் புதுச்சொல் உருவாக்குக

பல்	பால்
1. கல்	....
2. தரை	....
3. மலை	....

©KTBS NOT TO BE REPUBLISHED

4. நடு ....
5. படு ....
6. மடு ....

ஊ. கோடிட்ட சொற்களுக்கு எதிர்ச் சொல் அமைத்து வாக்கியங்களை எழுது.

1. நான் காலையில் பாடம் படிப்பேன் மாலையில்
2. முயல் வேகமாக ஓடியது ________________
3. சூரியன் கிழக்கு திக்கில் உதிப்பான் ________________
4. கூடியுண்டால் செல்வம் குறையும் ________________
5. நாங்கள் அனைவரும் நல்லவர்கள் ________________

எ. வரைந்து பழகுக :

ஒரு ○ வரைக ! அந்தவட்டத்தைக் கொண்டு என்ன உருவம் வரையலாம் என்று சிந்தித்து வரைந்து வண்ணம் தீட்டுக இதுபோல பல படங்கள் வரையவும்.



@KTBS NOT TO BE REPUBLISHED

இரண்டு படத்திற்கும் இடையே 7 வித்தியாசங்கள் உள்ளன கண்டுபிடிக்க.



1.
2.
3.
4.
5.
6.
7.

@KTBS NOT TO BE REPUBLISHED

17. முயல் குட்டியின் சந்தேகம்

குட்டிமுயல் எப்போதும்
சிந்தித்துக் கொண்டே
இருக்கும்
எதைச் சாப்பிடுவது ?
மீனைச் சாப்பிடுவதா ?
முள்ளங்கியைச் சாப்பிடுவதா ?
கேரட்டைச் சாப்பிடுவதா ?
புழுக்களைச் சாப்பிடுவதா ?

@KTBS NOT TO BE REPUBLISHED

எங்கே வாழ்வது ?
மரத்தில் வாழ்வதா ?
குகையில் வாழ்வதா ?
கூட்டில் வாழ்வதா ?
குன்றில் வாழ்வதா?

பறவைகள் மரத்தில் இருப்பதை முயல் குட்டி பார்த்தது. தானும் தாழ்ந்த, கிளையில் ஏறிக் கொண்டது அணில் பழம் தின்பதைப் பார்த்து தானும் பழம் தின்றது.

ஒரு நாள் காட்டில் ஒரே பரபரப்பு விலங்குகள் எல்லாம் ஓடி ஒளிந்தன.

ஓநாய் ஒன்று குட்டி முயலின் அருகே வந்தது. குட்டி முயல் அதைப் பார்த்தது.

"நீ யார் ?
நரியா ?
நாயா ?
பூனையா ?
புலியா ? " என்றது.

"இல்லை நான் தான் ஓநாய்" என்றது.

"நீ குகையில் வாழ்கிறாயா ?
பொந்தில் வாழ்கிறாயா ?
புற்றில் வாழ்கிறாயா ?
தோட்டத்தில் வாழ்கிறாயா ? "

என்று கேட்டது குட்டி முயல். "நான் காட்டில் வாழ்கிறேன்" என்றது ஓநாய்

"நீ பழங்களைச் சாப்பிடுவாயா ?
கிழங்குகளைச் சாப்பிடுவாயா ?
புல்லைச் சாப்பிடுவாயா ? "

என்று கேட்டது குட்டி முயல்.

"இல்லை, நான் உன்னைப் போன்ற முயல்களைத் தான் விரும்பிச் சாப்பிடுவேன்" என்று கூறிக் கொண்டே ஓநாய் குட்டி முயலை நெருங்கியது.

©KTBS
NOT TO BE REPUBLISHED



குட்டி முயல் அதிர்ச்சி அடைந்தது, ஒரு நொடி சிந்தித்தது. தப்பி ஓட நினைத்தது.

எப்படித் தப்பியிருக்கும் ?

இப்படித்தான் தப்பியது குட்டி முயல்

பயிற்சி

விடை எழுதுக.

1. குட்டி முயல் எதைச் சாப்பிடலாம் என்று எண்ணியது ?

____

____

2. எங்கெங்கு வாழலாம் என்று முயல் சிந்தித்தது ?

____

____

3. காட்டில் ஏன் பரபரப்பு ஏற்பட்டது ?

____

____

4. ஓநாய் எதை விரும்பிச் சாப்பிடுவதாகக் கூறியது ?

____

____

@KTBS NOT TO BE REPUBLISHED

ஆ. படத்தைப் பார்த்து விலங்குகள், பறவைகள் மலர்கள் பெயர்களை எழுதுக

விலங்குகள்	பறவைகள்	மலர்கள்

ஆ. கீழ்க்கண்ட கொச்சையான சொற்களுக்குச் செம்மையான சொல் எழுதுக :-

NOT TO BE REPUBLISHED @KTBS

கொச்சை	திருந்திய சொல்
1. அஞ்சி	ஐந்து
2. மாசம்	....
3. மொளகாய்	....
4. மொறம்	....
5. தண்ணி	....
6. தலக்காணி	....
7. எண்ணை	....
8. அருவாக்கத்தி	....
9. புன்னு	....

ஆ. பொருத்துக : -

	பழங்கள்	சுவைகள்
1.	மாதுளம்பழம்	இனிப்பு
2.	எலுமிச்சை	காரம்
3.	அன்னாசி	துவர்ப்பு
4.	மிளகாய்	புளிப்பு
5.	உப்பு	உவர்ப்பு

இ. சரியான எதிர்ச் சொற்களை எழுதுக

1. தாழ்ந்த x ....
2. சிறியது x ....
3. அருகில் x ....
4. விருப்பு x ....

@KTBS NOT TO BE REPUBLISHED

ஈ. சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து கோடிட்ட இடத்தை நிரப்புக : -

1. முயல் .... சாப்பிடும் (மீன், கேரட்)
2. பறவைகள் வாழும் இடம் .... (மரம், குகை)
3. அணில் .... விரும்பிச் சாப்பிடும் (காய், பழம்)
4. ஓநாய் .... வாழ்கிறது. (வீட்டில், காட்டில்)

உ.குழுவில் சேராததைக் கோடிட்டுக் காட்டுக :-

1. முயல், ஓநாய், நரி, காகம்
2. தாமரை, அவரை, மல்லிகை, செவ்வந்தி
3. வாழை, கொய்யா, பலா, வெண்டை
4. தென்னை மரம், மாமரம், புளியமரம், துளசி
5. கிளி, மயில், குயில், குரங்கு

ஊ. சரியா (✔) தவறா (✕) சொல்லுக : -

1. முயல் எலியைத் தின்னும் (   )
2. முயல் கேரட் சாப்பிடும் (   )
3. ஓநாய் காட்டில் வாழும் (   )
4. நரி தந்திரமான விலங்கு (   )
5. காகத்தின் நிறம் வெண்மை (   )
6. அணில் பழம் சாப்பிடும் (   )

@KTBS
NOT TO BE REPUBLISHED

எ. கோடிட்ட இடத்தைக் கட்டத்தின் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து நிரப்புக :-

1. குழந்தை .... ஓடியது
2. பட்டாசு .... வெடித்தது
3. நதி .... ஓடியது
4. உடல் குளிரால் ....
5. மழை .... பொழிந்தது

நடுநடுங்கியது, குடுகுடுவென்று, பட்டபடவென, சலசலவென, சடசடவென.

ஏ. படத்தைப் பார்த்து அதன் பெயர்களை எழுதுக :





எழுதிப் பழகுக

எதைச் சாப்பிடுவது ? மீனைச் சாப்பிடுவதா ?

@KTBS NOT TO BE REPUBLISHED

நீ குகையில் வாழ்கிறாயா ?

தோட்டத்தில் வாழ்கிறாயா ? புற்றில் வாழ்கிறாயா ?

'நான் காட்டில் வாழ்கிறேன்' என்றது ஓநாய்

@KTBS
NOT TO BE REPUBLISHED

நல்லவனும் கெட்டவனும்

ராமு மிக மிக நல்லவனாம்
நடத்தையில் மிக்க உயர்ந்தவனாம்.
எவர்க்கும் அன்பாய் நடப்பவனாம்.
இரக்கம் மிகவும் உடையவனாம்.
ஆயினும் நல்லவன் என்றவனை
அறிபவர் மிகமிகச் சிலரேதான்
ஒரு நாள் வீதியில் பெருங்கூட்டம்
ஒன்று கூடி நிற்பதை நான்

கண்டேன் உடனே சென்றங்கே
காரணம் யாதெனக் கேட்டேன் நான்
பாலு என்னும் ஒரு பையன்.
பழக் கடை ஒன்றில் நுழைந்தானாம்
மாம்பழம் ஒன்றை எடுத்தானாம்
மறைத்து மடியில் வைத்தானாம்
பார்த்ததும் உடனே கடைக்காரர்
பட்டென அறைகள் விட்டாராம்
திருடன் திருடன் என்றவனைத்
திட்டினார் அங்கு யாவருமே
பாலு கெட்டவன் என்றறியப்
பத்தே நிமிடம் ஆனதடா
ராமு நல்லவன் என்றுணர
நாட்கள் பற்பல ஆகுமடா
கெட்டவன் எனவே பெயரெடுக்க
சட்டென முடியும் ஆனாலே
நல்லவன் என்று பெயர் பெறவே
நாட்கள் மிகவும் ஆகுமென
அறிந்தேன் அன்று ஓர் உண்மை
அடைவோம் இதனால் பெருநன்மை

- அழ. வள்ளியப்பா.

©KTBS NOT TO BE REPUBLISHED

பாடிப் பழகுக : பாடலின் நீதியை அறிக.

அ. ஒரு வரியில் விடை எழுதுக :-

1. ராமு எப்படிப் பட்டவன் ?

____

____

2. ராமுவின் நடத்தையை கூறுக ?

____

____

3. பாலு என்ன செய்தான் ?

____

____

4. மாம்பழத்தை எடுத்தது யார் ?

____

____

5. கடைக்காரர் என்ன செய்தார் ?

____

____

6. அங்குள்ளவர்கள் பாலுவை என்னவென்று திட்டினர் ?

____

____

7. நல்லவன் என்று பெயரெடுக்க எவ்வளவு காலம் பிடிக்கும் ?

____

____

ஆ. கோடிட்ட இடங்களை நிரப்புக :-

1. *ஒரு நாள் வீதியில் .... கூட்டம்.*

2. .... *பழம் ஒன்றை எடுத்தானாம்.*

@KTBS NOT TO BE REPUBLISHED

3. .... மடியில் வைத்தானாம்.

4. நல்லவன் என்று பெயர் பெற .... மிகவும் ஆகுமென அறிந்தேன்.

இ. எதிர்ச் சொல் தருக :-

1. நல்லவன் x ....
2. உயர்ந்தவன் x ....
3. திருடன் x ....
4. திட்டினர் x ....
5. இரக்கம் x ....

ஈ. வரிசைப்படுத்தி எழுது.

1. நெய், பால், தயிர், வெண்ணெய் ....
2. பழம், பிஞ்சு, காய், பூ ....
3. துணி, பஞ்சு, நூல், சட்டை ....
4. முட்டை, கோழி, குஞ்சு ....

உ. குழுவில் சேராததை வட்ட மிடுக :-

1. வாழைப்பழம், மாம்பழம், கத்திரி, மாதுளை ....
2. உயர்ந்தவன், நல்லவன், திருடன், நன்னடத்தை ....
3. சிங்கம், புலி, பசு, சிறுத்தை ....
4. மல்லிகை, முல்லை, ரோஜா, காலி.:.பிளவர் ....

@KTBS NOT TO BE REPUBLISHED

ஊ. பொருத்துக.

அ		ஆ
ராமு	-	மாம்பழத்தை எடுத்தான்
பாலு	-	மிக மிக நல்லவனாம்
கடைக்காரர்	-	பெயர் பெற நாட்களாகும்
திருடன்	-	பட்டென அறைகள் விட்டார்
நல்லவன்	-	என்று திட்டினர் யாவரும்

எ. பொருத்தமான எழுத்தால் கோடிட்ட இடங்களை நிரப்பி எழுதுக.

1. ம......த்து (ரை, றை)
2. தி......டன் (ரு, று)
3. க......டேன் (ன், ண்)
4. நு......ந்து (ழை, ளை)
5. ந......லவன் (ள், ல்)

@KTBS NOT TO BE REPUBLISHED

ஏ. விளையாடுவோம் :

பலவகைக் கட்டளைகளை எழுதிப் பெட்டியில் போடுக, குழுவில் ஒவ்வொருவரும் ஒரு அட்டையை எடுக்க, அதில் எழுதியிருப்பதற்கு ஏற்ப நடித்துக் காட்டுக (எ - டு)

குயில் போல் கூவு
கண்டக்டர் போல் நடி
யானை போல் நடக்க

சுத்தம் சுகம் தரும்

18. டைனோசர்

பூமியில் ஏறக்குறைய 1300 வகையான “ஊர்வன வாழ்கின்றன. ஒரு காலத்தில் பூமியின் முக்கிய உயிரினமாக டைனோசர் திகழ்ந்தது. அது பூமியின் முக்கிய உயிரினங்களில் மிகப் பெரியது. மிக அதிகமான எடை உடையது.

@KTBS NOT TO BE REPUBLISHED

டைனோசர்கள் கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் பூமியில் வாழ்ந்து வந்தன. டைனோசர் என்னும் பெயர் கிரேக்க மொழியிலிருந்து வந்தது. இதன் பொருள் ‘ராட்சசப்பல்லி” இவைகள் வாழ்ந்த காலத்தை ‘ ‘மெஸோஜோக் என்றழைக்கிறார்கள்.



டைனோசர்களில் உருவத்தில் சிறியனவும் இருந்தன. சிலவற்றின் தோல் மிருதுவாகவும், பலவற்றின் தோல் செதில்கள் உடையனவாகவும் இருந்தன.

தற்காப்புக்காக அகலமான தசை முடிச்சுக்களைக் கொண்டிருந்தன. அவைகளின் உணவு மற்ற விலங்குகளின்

மாமிசம் ஆகும் சில டைனோசர்கள் தாவரங்களை மட்டுமே உண்டு வாழ்ந்தன. இன்று டைனோசர்கள் பூமியில் இல்லை அழிந்து விட்டன.

தட்ப வெப்ப நிலை மாற்றத்தாலும், பூமியில் ஏற்பட்ட இயற்கை மாறுபாட்டாலும் விண்ணிலிருந்து விழுந்த விண்கற்களாலும் டைனோசர்கள் அழிந்திருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

அ. படிக்கவும்

1. ஊர்வன
2. டைனோசர்
3. கோடிக்கணக்கான
4. கிரேக்க மொழி
5. ராட்சசப்பல்லி
6. மெஸோஜோக்
7. விண்கற்கள்
8. ஆராய்ச்சியாளர்கள்
9. இயற்கை
10. தசை முடிச்சுகள்

@KTBS NOT TO BE REPUBLISHED

ஆ. கோடிட்ட இடங்களை நிரப்புக :-

1. பூமியில் சுமார் 1300 வகையான .... வாழ்கின்றன.
2. .... என்னும் பெயர் கிரேக்க மொழியிலிருந்து வந்தது.
3. டைனோசர்கள் வாழ்ந்தகாலத்தை .... என்றழைக்கிறார்கள்
4. சில டைனோசர்கள் .... மட்டுமே உண்டு வாழ்ந்தன
5. விண்ணிலிருந்து விழுந்த விண்கற்களாலும் .... அழிந்திருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்

இ. வினாக்களுக்கு விடை தருக :

1. பூமியில் எத்தனை வகையான ஊர்வன வாழ்கின்றன ?

____

____

2. "டைனோசர்" என்ற சொல் எந்த மொழியிலிருந்து வந்தது ?

____

____

3. டைனோசர்களின் உணவு யாது ?

____

____

4. சில டைனோசர்கள் எதை மட்டுமே உண்டு வாழ்ந்தன ?

____

____

5. பூமியின் உயிரினங்களில் முக்கியமானது எது ?

____

____

@KTBS NOT TO BE REPUBLISHED

உ. எடுத்துக்காட்டு பார்த்து எழுதுக :

வாழ் - வாழக்கூடாது - வாழாதே

1. குடி - .... - ....
2. மாறு - .... - ....
3. சேர் - .... - ....
4. சொல் - .... - ....
5. மீறு - .... - ....

ஊ. பொருத்தி எழுதுக.

1.	ஊர்வன	ராட்சசப்பல்லி
2.	டைனோசர்	டைனோசர் வாழ்ந்த காலம்
3.	மெஸோஜோக்	டைனோசர் என்ற பெயர்
4.	கிரேக்க மொழி	1300 வகை

எ. முதல் எழுத்தை மாற்றி வேறு சொல்லாக்கி எழுதுக.

பள்ளி	கள்ளி	....	....	....
குட்டி	வட்டி	....	....	....
மரம்	கரம்	....	....	....
சரி	கரி	....	....	....
நாற்று	காற்று	....	....	....
நன்று	கன்று	....	....	....

@KTBS
NOT TO BE REPUBLISHED

ஏ. செய்து பார்க்க :

ஒரு சதுர வடிவப் பாலிதீன் தாள், **சிறு கண்டு நூல்** பொம்மை இவற்றைக் கொண்டு பாராசூட் செய்யவும்.



இனத்தில் சேராததை வட்டமிட்டு எழுதுக



கந்தையானாலும் கசக்கிக் கட்டு

NOT TO BE REPUBLISHED @ TBS

எனது குடும்பம்

அம்மா அப்பா இருவராம்
        அழகுப் பிள்ளைகள் இருவராம் !
மொத்தம் நான்கு பேர்களாம்
        நித்தம் அன்பு பொங்குமே !

சின்னக் குடும்பம் நாளுமே
        சிரித்து வாழ முடியுமே !
கன்னல் சாற்றின் சுவையைப் போல்
        களிப்பு வாழ்வு கிட்டுமே !

19. ஓடி விளையாடு பாப்பா



ஓடி விளையாடு பாப்பா ! - நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா !
கூடி விளையாடு பாப்பா ! - ஒரு
குழந்தையை வையாதே பாப்பா !

சின்னஞ் சிறு குருவி போல - நீ
திரிந்து பறந்து வா பாப்பா !
வண்ணப் பறவைகளைக் கண்டு - நீ
மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா !

காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு - என்று
வழக்கப் படுத்திகொள்ளு பாப்பா !

சாதிகள் இல்லையடி பாப்பா ! - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி, உயர்ந்த மதி, கல்வி - அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்.

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் :
வயிர முடைய நெஞ்சு வேணும் - இது
வாழும் முறைமையடி பாப்பா !

- மகாகவி. சுப்பிரமணிய பாரதி

©KTBS NOT TO BE REPUBLISHED

அருஞ்சொற் பொருள் :

ஓய்ந்திருக்க = களைத்து

வையாதே = நிந்திக்காதே

கனிவு = இன்பம்

வழக்கம் = பழக்கம்

தாழ்ச்சி = தாழ்த்தி

உயர்ச்சி = உயர்த்தி

மேலோர் = உயர்ந்தோர்

அ. விடையளிக்க :-

1. குழந்தைகள் எப்படி விளையாட வேண்டும் ?

____

2. எதைப்போல பாப்பா பறந்து திரிந்து வர வேண்டும் ?

____

3. காலையில் என்ன செய்ய வேண்டும் ?

____

4. எப்பொழுது விளையாட வேண்டும் ?

____

5. எது பாவம் ?

____

6. யாரிடத்தில் அன்பு கொள்ள வேண்டும் ?

____

©KTBS
NOT TO BE REPUBLISHED

ஆ. கோடிட்ட இடங்களை நிரப்புக : -

1. ஒரு குழந்தையை .... பாப்பா.
2. வண்ணப் பறவைகளைக் கண்டு மனதில் .... கொள்ளு பாப்பா.
3. காலை எழுந்தவுடன் ....
4. சாதிகள் .... பாப்பா.
5. வயிர முடைய .... வேணும்.

இ. பிரித்தெழுதுக :-

1. ஓய்ந்திருக்க ....
2. உயர்ந்த மதி ....
3. உயிர்களிடத்தில் ....
4. உண்மையென்று ....

ஈ. எதிர்ச் சொல் தருக : -

1. காலை × ....
2. தாழ்ச்சி × ....
3. நிறைய × ....
4. மகிழ்ச்சி × ....
5. அன்பு × ....

@KTBS NOT TO BE REPUBLISHED

உ. முதல் எழுத்தை மாற்றி வேறு சொல்லாக்கி எழுது :-

1. காலை மாலை ....

2. சாதிகள் ....

3. பாட்டு ....

4. தலைகள் ....

5. அன்பு ....

ஊ. ஒலி நயச் சொற்களை எடுத்தெழுதுக.

(எ-டு) ஓடி கூடி

காலை ....

சாதி ....

சின்ன ....

@KTBS NOT TO BE REPUBLISHED

எ. படித்தறிக :-

காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு

கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு

மாலை முழுதும் விளையாட்டு - என்று

வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா !

காட்டில் உள்ள விலங்குகளின் தலைகள் மாறியுள்ளன கோடுகளால் சரியான தலைகளைப் பொருத்துக : -

@KTBS NOT TO BE REPUBLISHED

20. முழுக்காலும் முக்காலும்

Z3P1Z4



ஒரு பெரிய நகரத்தில் நான்கு வியாபாரிகள் சேர்ந்து வந்தார்கள். அவர்கள் வைத்திருந்த பஞ்சினை எலிகள் கடித்துக் குதறி தொல்லை தந்தன எலிகளை ஒழிக்க பூனை ஒன்றை வளர்த்தார்கள். பூனையின் நான்கு கால்களையும் நான்கு வியாபாரிகளும் ஆளுக்கு ஒன்றாகப் பேணிப் பாதுகாத்து வந்தார்கள்.

ஒரு நாள் அந்தப் பூனை, எலிகளைப் பிடிக்க அங்கும் இங்கும் ஓடியது ; தாவியது. அப்போது அது கீழே விழுந்ததால் அடிப்பட்டு ஒரு காலில் இருந்து இரத்தம் கொட்டியது. அதனைக்கண்ட அந்தக் காலுக்கு சொந்தக்கார வியாபாரி அதில் மண்ணெண்ணெய் தடவி கட்டுப் போட்டான்.

பூனை, கால் கட்டோடு அங்கும் இங்கும் ஓடியது. அப்போது மேசை மீது எரிந்து கொண்டிருந்த மண்ணெண்ணெய் விளக்கு (சிம்னி) உரசியதால் பூனையின் காலில் கட்டுப்போட்டிருந்த துணி மீது தீப்பற்றியது. பூனை, பயத்தால் தாறு மாறாக ஓடியது. அதனால் அங்கிருந்த பஞ்சு மூட்டைகள் அனைத்தும் எரிந்து சாம்பலாயின.

@KTBS NOT TO BE REPUBLISHED



வெளியில் சென்று இருந்த நான்கு வியாபாரிகளும் திரும்பி வந்து பார்த்த போது, அதிர்ச்சி அடைந்தனர். இவை அனைத்திற்கும் காரணம், அடிபட்ட காலுக்குரிய வியாபாரிதான் என்று மற்ற மூவரும் முடிவு செய்து, அந்த வியாபாரியிடம் நஷ்ட ஈடு கேட்டு நீதி மன்றம் சென்றார்கள்.

வழக்கை விசாரித்த நீதிபதி, "நீங்கள் வளர்த்த பூனையின் கால்களில், அவனுடைய கால் நொண்டிக்கால், உங்களுடைய கால்கள் நல்ல கால்கள். அவன் கால் முக்கால், உங்கள் கால்கள் முழுக்கால். அப்படி இருக்கும் போது அந்தப் பூனை, நொண்டிக் காலில் எப்படி ஓடி இருக்க முடியும் ? எனவே பஞ்சு மூட்டைகள் எரிந்ததற்குக் காரணம் நொண்டிக்கால் அல்ல, நல்ல கால்களே! முக்கால் அல்ல முழுக்காலே !" என்று தீர்ப்பு கூறினார். அதனைக் கேட்ட மற்ற மூவரும் தங்கள் தவறை உணர்ந்து நான்காவது வியாபாரியிடம் மன்னிப்பு கேட்டனர்

©KTBS NOT TO BE REPUBLISHED

அருஞ்சொற் பொருள்

தொல்லை = துன்பம், ஒழிக்க = அழிக்க.

தாவியது = பாய்ந்தது, உணர்ந்து = அறிந்து,

பேணி = பாதுகாத்தல்.

படிக்க : -

- எலிகளை ஒழிக்க பூனை ஒன்றை வளர்த்தார்கள்
- அடிபட்டு ஒருகாலிலிருந்து இரத்தம் கொட்டியது.
- பூனை கால் கட்டோடு அங்கும் இங்கும் ஓடியது.
- விளக்கு உரசியதால் காலில் கட்டுப் போட்ட துணி தீப்பற்றியது.
- இவை அனைத்திற்கும் காரணம் அடிபட்ட காலுக்குரிய வியாபாரிதான்.
- மற்ற மூவரும் வியாபாரியிடம் நஷ்ட ஈடு கேட்க நீதி மன்றம் சென்றனர்.
- வழக்கை விசாரித்த நீதிபதி நீங்கள் வளர்த்த பூனையின் கால்களில் அவனுடைய கால் நொண்டிக்கால். உங்களுடைய கால்கள் நல்ல கால்கள். அவன் கால் முக்கால் உங்களுடைய கால்கள் முழுக்கால்கள். அப்படி இருக்கும் போது அந்தப் பூனை நொண்டிக்காலால் எப்படி ஓடி இருக்க முடியும்.
- பஞ்சு மூட்டைகள் எரிந்ததற்குக் காரணம் நொண்டிக்கால் அல்ல, நல்ல கால்களே; முக்கால் அல்ல, முழுக்காலே என்று நீதிபதி தீர்ப்பு கூறினார்.

©KTBS NOT TO BE REPUBLISHED

பயிற்சி

அ. ஒன்று அல்லது இரண்டு வரிகளில் விடை தருக :

1. நான்கு வியாபாரிகளும் என்ன வியாபாரம் செய்து வந்தார்கள் ?

____

2. வியாபாரிகள் எலிகளை ஒழிக்க என்ன செய்தார்கள் ?

____

3. வியாபாரி அடிபட்ட காலுக்கு என்ன செய்தான்?

____

4. பூனை தீப்பற்றிய காலுடன் ஓடியதால் என்ன நடந்தது ?

____

5. மூன்று வியாபாரிகளும் நஷ்ட ஈடு கேட்டு எங்குச் சென்றார்கள் ?

____

ஆ. விடுபட்ட சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக : -

(பால், நீந்தி, துள்ளி, பறந்து, தாவி)

1. மான்கள் .... குதித்து ஓடும்.
2. பசுக்கள் .... கொடுக்கும்.
3. பறவைகள் வானத்தில் .... செல்லும்.
4. மீன்கள் நீரில் .... செல்லும்.
5. *தவளை .... குதித்து ஓடும்.*

இ. தொடர்களை முறைப்படுத்தி எழுதுக : -

1. பால் பசுவின் நல்லது உடலுக்கு.
2. வீச மரம் அசையும் காற்று.
3. கொடியைக் குமரன் உயிர்விட்டான் காக்க
4. கண்ணன் வரைந்தான் ஓவியம்.
5. ஓடியது பூனை அங்கும் இங்கும்.

____

____

NOT TO BE REPUBLISHED @KTBS

கோடிட்ட இடங்களை நிரப்புக : -

1. நான்கு வியாபாரிகள் .... வியாபாரம் செய்தனர்.
2. பஞ்சு மூட்டைகளை .... கடித்துக் குதறின.
3. எலிகளை ஒழிக்க .... வளர்த்தார்கள்.
4. பூனை எலிகளைப் பிடிக்க .... ஓடியது, தாவியது.
5. பூனையின் காலிலிருந்து .... கொட்டியது.
6. பூனை .... கட்டோடு அங்கும் இங்கும் ஓடியது.
7. கட்டுப் போட்டிருந்த .... மீது நெருப்புப் பற்றியது.
8. மூன்று வியாபாரிகளும் .... கேட்டு நீதி மன்றம் சென்றனர்.
9. அவனுடைய கால் .... உங்களுடைய கால்.................
10. தவறை உணர்ந்து நான்காவது .... யிடம் மன்னிப்புக் கேட்டனர்.

@KTBS NOT TO BE REPUBLISHED

ஒரே பொருள் தரும் சொற்களைக் கோடிட்டுப் பொருத்துக.

வரி	விண்மீன்	உடை	காடு	ஆறு
ஆடை	கோடு	நட்சத்திரம்	நதி	வனம்

ஈ. பொருத்தமான எதிர்ச்சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக :-

(சிறியது, குட்டையாக, மெதுவாக, வெண்மை, இரவில்)

1. முயல் வேகமாக ஓடும், ஆமை .... செல்லும்.
2. பனை மரம் உயரமாக இருக்கும் ; தக்காளிச் செடி .... இருக்கும்.
3. பூசணிக்காய் பெரியது ; கடுகு ....
4. சூரியன் வருவது பகலில் ; நிலா வருவது ....
5. காகம் கருமை ; பால் ....

உ. எதிர்ச்சொற்களை எழுதுக :-

1. பெரியது x
2. கருமை x
3. பகல் x
4. குட்டை x
5. வேகம் x

பெரியோர் சொல் கேள்.

@KTBS NOT TO BE REPUBLISHED

21 எறும்பும் புறாவும்

Y8W7Y4

ஓர் எறும்பு தண்ணீர் குடிப்பதற்காக ஆற்றங்கரைக்குப் போயிற்று. தண்ணீர் குடிக்கும் போது தவறி தண்ணீரில் விழுந்துவிட்டது. அதை ஆற்று நீர் அடித்துக்கொண்டு போகும் போது ஒரு புறா அதனைப் பார்த்தது. எறும்பு மீது இரக்கம் கொண்டு ஒரு சிறு இலையைப் பறித்து ஆற்று நீரில் போட்டது அதில் ஏறி எறும்பு நலமாய்க் கரை சேர்ந்தது.

© KTBS NOT TO BE REPUBLISHED

மற்றொரு நாள் ஒரு வேடன் அந்தப் புறா மீது அம்பு எய்யக் குறிப்பார்த்துக் கொண்டிருந்தான்.

அதைக் கண்ட எறும்பு புறாவுக்கு உதவி செய்ய விரும்பியது. உடனே வேடனின் காலை பலமாய்க் கடித்தது, வலியினால் காலை உதறிய வேடனின் குறி தப்பியது. இதனால் புறா உயிர் பிழைத்தது.

அ. ஒரு வரியில் விடையளிக்க :-

1. ஆற்றில் தண்ணீர் குடிக்கச் சென்றது எது ?

____

____

2. தண்ணீர் குடிக்கும் போது எறும்பு என்ன ஆனது ?

____

____

3. எறும்பு ஆற்று நீரில் அடித்துச் சென்றபோது அதனைப் பார்த்தது எது ?

____

____

4. புறா எறும்புக்கு என்ன செய்தது ?

____

____

@KTBS NOT TO BE REPUBLISHED

5. புறா மீது அம்பு எய்தது யார் ?

____

____

ஆ. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. தண்ணீர் குடிப்பதற்காக எறும்பு .... சென்றது.

2. புறா எறும்பு மீது .... கொண்டது.

3. காலை உதறிய வேடனின் குறி ....

4. ஆபத்தில் இருப்பவர்களுக்கு நாம் .... செய்ய வேண்டும்.

இ. சரியான எழுத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக :

1. எ.... ம்பு (று, ரு)

2. தவ .... (ரி, றி)

3. பு .... (றா, ரா)

4. ....டன் (வே, வை)

ஈ. மாறியுள்ள எழுத்துக்களை வரிசைப்படுத்தி மறைந்துள்ள பறவைகளின் பெயரைக் கண்டுபிடித்து எழுதுக :

1. | து | த் | வா | ....

2. | றா | பு | | ....

3. | ளி | கி | | ....

@KTBS
NOT TO BE REPUBLISHED

4.	கு	க்	கொ	....
5.	ழி	கோ		....
6.	ம்	க	கா	....
7.	ல்	ம	யி	....

படத்தின் பெயர்களை எழுதுக

____



____



____

©KTBS NOT TO BE REPUBLISHED

விளையாடுவோம் : -

பலவகைக் கட்டளைகளை எழுதிப் பெட்டியில் போடுக, குழுவில் ஒவ்வொருவரும் ஒரு அட்டையை எடுக்க, அதில் எழுதியிருப்பதற்கு ஏற்ப நடித்துக் காட்டுக :

(எ - டு) ஆசிரியர் பாடம் நடத்துவது போல நடி

அன்னையே முதல் தெய்வம்

இவர்கள் என்ன செய்கிறார்கள்?

பழமொழிகள்

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
2. ஆயிரம் காக்கைக்கு ஒரு கல்.
3. ஆனைக்கும் அடி சறுக்கும்.
4. இக்கரைக்கு அக்கரை பச்சை.
5. இளமையில் சோம்பல், முதுமையில் வறுமை.
6. ஈட்டி எட்டின மட்டும் பாயும், பணம் பாதாளம் மட்டும் பாயும்.
7. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
8. எறும்பு ஊரக் கல்லும் தேயும்.
9. ஏட்டுச் சுரைக்காய் கூட்டுக்கு உதவாது.
10. ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையுமா ?
11. ஒழுங்கு ஊராளும்.
12. காலம் போகும், வார்த்தை நிற்கும்.
13. சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்.
14. தம்பி உடையான் படைக்கு அஞ்சான்.
15. தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை.
16. பதறாத காரியம் சிதறாது.
17. பார்த்தால் பூனை, பாய்ந்தால் புலி.
18. மனம் இருந்தால், வழியுண்டு.
19. வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்.
20. குந்தித் தின்றால் குன்றும் மாளும்

@KTBS NOT TO BE REPUBLISHED

எழுதிப் பழகுக :

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

எறும்பு ஊரக் கல்லும் தேயும்.

தம்பி உடையான் படைக்கு அஞ்சான்

மனம் இருந்தால் வழியுண்டு

@KTBS NOT TO BE REPUBLISHED

22. வீண் பெருமை

X2Z1I7



கழுதையும் சேவலும் மேய்ந்து கொண்டிருந்த இடத்திற்கு தற்செயலாக சிங்கம் ஒன்று வந்தது. சிங்கத்தைப் பார்த்து பதறிய சேவல் பலம் கொண்ட மட்டும் கொக்கரித்தது. அந்தச் சிங்கத்திற்குச் சேவலின் கொக்கரிப்பு மட்டும் பிடிக்கவே பிடிக்காது எனவே, அந்த இடத்தை விட்டு ஓட்டம் பிடித்தது.

சிங்கம் ஓடுவதைக் கண்ட கழுதை தன்னைக் கண்டு பயந்தே சிங்கம் ஓடுவதாக எண்ணி அதைத் துரத்திக் கொண்டே ஓடிற்று.

சேவலின் கொக்கரிப்பு காதுக்குக் கேட்காத தூரத்திற்குப் போனதும் சிங்கம் திரும்பிக் கழுதை மீது பாய்ந்தது. அதைச் சின்னாபின்னமாக்கிக் கொன்றது.

வீண் பெருமை ஆபத்தில் முடியும் !

©KTBS NOT TO BE REPUBLISHED





அ. ஒரே வரியில் விடை எழுதவும் : -

1. **சேவல் எதைக் கண்டு பயந்தது ?**

____

2. சிங்கத்திற்கு என்ன பிடிக்காது ?

____

3. **கழுதை என்ன எண்ணியது ?**

____

4. கழுதை எதைத் துரத்திக் கொண்டு ஓடிற்று ?

____

5. சிங்கம் எதன் மீது பாய்ந்தது ?

____

ஆ. பொருத்துக : -

1. கழுதை - குரைக்கும் ______________
2. சேவல் - கூவும் ______________
3. புலி - கத்தும் ______________
4. குயில் - கொக்கரிக்கும் ______________
5. நாய் - உறுமும் ______________

@KTBS NOT TO BE REPUBLISHED

இ. கோடிட்ட இடத்தை நிரப்புக :-

1. கழுதையும் .... மேய்ந்து கொண்டிருந்தன.
2. சிங்கத்தைப் பார்த்த சேவல் பலம் கொண்ட மட்டும் ....
3. சிங்கத்தை ....துரத்தியது.
4. கழுதை மீது .... பாய்ந்தது.
5. வீண் பெருமை .... முடியும்.

ஈ. சரியா (✓) தவறா (X) என்று குறிப்பிடுக :-

1. கழுதையும் சேவலும் மேய்ந்து கொண்டிருந்தன. (   )
2. சிங்கத்திற்கு சேவலின் கொக்கரிப்பு பிடிக்கும். (   )
3. சிங்கம் கழுதையைக் கண்டு பயந்தது. (   )
4. சிங்கம் திரும்பிக் கழுதை மீது பாய்ந்தது. (   )
5. வீண் பெருமை ஆபத்தில் முடியும். (   )

@KTBS NOT TO BE REPUBLISHED

இ. பொருத்தமான சொற்களை இணைத்துத் தொடராக்கி எழுதுவேன்.

பொன்	முட்டை	பொன்வண்டு
வான்	தோகை	....
கோழி	வண்டி	....
தொலை	கோழி	....
மயில்	பேசி	....
தொடர்	வண்டு	....

ஈ. முதல் எழுத்தை மாற்றி புதிய சொல் உருவாக்குவேன்.

வண்டு	ந	ண்	டு	நண்டு
மயில்		யி	ல்	....
பணம்		ண	ம்	....
பழம்		ழ	ம்	....
சினம்		ன	ம்	....
கூடு		டு		....
யானை		னை		....
வால்		ல்		....
வாய்		ய்		....
பெண்		ண்		....

உ. புதிய சொற்களை உருவாக்கி எழுதுக



தலை

....

....

....

....

....

@KTBS
NOT TO BE REPUBLISHED



ஆசை

....

....

....

....

....



குடை

....

....

....

....

....

@KTBS
NOT TO BE REPUBLISHED

ஊ. முதல் எழுத்தை நெடிலாக மாற்றிப் புதிய சொல் எழுதுக.

கல் .... கால்

பல் ....

படம் ....

மடம் ....

நகம் ....

பலம் ....

சிங்கத்தைப் பார்த்து பதறிய சேவல்.

பலம் கொண்டமட்டும் கொக்கரித்தது.

வீண் பெருமை ஆபத்தில் முடியும்.

சிங்கம் கழுதையின் மீது பாய்ந்தது.

@KTBS NOT TO BE REPUBLISHED

இன்பத்தமிழ்

தமிழுக்கும் அமுதென்று பேர் ! - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர் !
தமிழுக்கு நிலவென்று பேர் ! - இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர் !
தமிழுக்கு மண மென்று பேர் ! - இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர் !
தமிழுக்கு மதுவென்று பேர் ! - இன்பத்
தமிழ் எங்கள் உரிமைச் செம் பயிருக்கு வேர் !

- பாவேந்தர் பாரதிதாசன் .

NOT TO BE REPUBLISHED @KTBS

அறிந்து கொள்க : திங்கள் பன்னிரண்டுக்கும் தமிழ் முறைப்படி தனித்தனி பெயர்களுண்டு. ஆங்கில முறைப்படியும் தனித்தனி பெயர்கள் உண்டு.

தமிழ் முறைப்படி		ஆங்கில முறைப்படி	
1. சித்திரை	7. ஐப்பசி	1. ஜனவரி	7. ஜூலை
2. வைகாசி	8. கார்த்திகை	2. பிப்ரவரி	8. ஆகஸ்டு
3. ஆனி	9. மார்கழி	3. மார்ச்	9. செப்டம்பர்
4. ஆடி	10. தை	4. ஏப்ரல்	10. அக்டோபர்
5. ஆவணி	11. மாசி	5. மே	11. நவம்பர்
6. புரட்டாசி	12. பங்குனி	6. ஜூன்	12. டிசம்பர்

எழுதிப் பழுகுக.

தமிழுக்கும் அமுதென்று பேர் !

தமிழுக்கு நிலவென்று பேர் !

தமிழுக்கு மணமென்று பேர் !

தமிழுக்கு மதுவென்று பேர் !

@KTBS
NOT TO BE REPUBLISHED

23. விடுகதை

C3Y9D2

அ

அடிமேல் அடிவாங்கி
அனைவரையும் சொக்க வைக்கும்
அது என்ன ? ....

ஆ

ஆடு முன்பே சட்டை போடுவான்
ஆடு முன்பே கழற்றி விடுவான்
அவன் யார் ? ....

இ

இதயம் போல் துடிப்பிருக்கும்
இரவு பகல் விழித்திருக்கும்.
அது என்ன ? ....

ஈ

ஈரப் புடவைக்காரி
இருபத்து எட்டுச் சுற்றுக்காரி
அவள் யார் ? ....

உ

உருவத்தில் சிறியவன்
உழைப்பில் பெரியவன்.
அவன் யார் ? ....

©KTBS NOT TO BE REPUBLISHED

ஊ

ஊசி நுழையாத கிணற்றில்
ஒரு ஆழாக்குத் தண்ணீர்

அது என்ன ? ....

எ

என் தாயோ கடல், தந்தையோ சூரியன்
என்னை விரும்பாத வீடே இல்லை

நான் யார் ? ....

ஏ

ஏனைக் கோணல் மூன்று
கண் ஆறு, கால் பத்து.

அது என்ன ? ....

ஐ

ஐந்து நதிக்கு ஒரே பாலம்

அது என்ன ? ....

ஒ

ஒரு தட்டில் ஆயிரம் ஓட்டைகள்

அது என்ன ? ....

ஓ

ஓடுவான் பறப்பான்
ஒற்றைக்காலில் நிற்பான்

அவன் யார் ? ....

@KTBS NOT TO BE REPUBLISHED

24. உலக நீதி

1. ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்.
   ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்.
2. மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்.
   வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்.
3. போகாத இடந்தனிலே போக வேண்டாம்.
   போகவிட்டுப் புறம் சொல்லித் திரிய வேண்டாம்.
4. மனம் போன போக்கு எல்லாம் போக வேண்டாம்.
   மாற்றானை உறவு என்று நம்ப வேண்டாம்.
5. மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்.
   மூத்தோர் சொல் வார்த்தைதனை மறக்க வேண்டாம்.
6. சேராத இடந்தனிலே சேர வேண்டாம்.
   செய்த நன்றி ஒரு நாளும் மறக்க வேண்டாம்.
7. திறம் பேசிக் கலகமிட்டுத் திரிய வேண்டாம்.
   தெய்வத்தை ஒரு நாளும் மறக்க வேண்டாம்.
8. கொற்றவனோடு எதிர்மாறு பேச வேண்டாம்
   கோயில் இல்லா ஊரில்குடி இருக்க வேண்டாம்.
9. நஞ்சுடனே ஒருநாளும் பழக வேண்டாம்.
   நல் இணக்கம் இல்லாரோடு இணங்க வேண்டாம்.

10 அஞ்சாமல் தனிவழியே போக வேண்டாம்.
   அடுத்தவரை ஒரு நாளும் கெடுக்க வேண்டாம்.

\- ஔவையார்

NOT TO BE REPUBLISHED @KTBS

அருஞ்சொற்பொருள் :-

கொற்றன் - அரசன்

திறம் பேசி - தன்னைத்தான் புகழ்ந்து கொள்வது

வார நாட்கள்

திங்கள் செவ்வாய் புதன்கிழமை
சேர்ந்து வியாழன் வெள்ளியுடன்
இங்கே சனியும் ஞாயிறுமே
இணைந்தால் ஏழு நாளாகும்.

- அ. கி. பரந்தாமனார்.

எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்

NOT TO BE REPUBLISHED @KTBS

பாடிப் பழகுக :

பிருந்தாவனமும் நந்தகுமாரனும்

பிருந்தாவனமும் நந்தகுமாரனும்
யாவருக்கும் பொது செல்வமன்றோ!
ஏனோ ராதா இந்தப் பொறாமை
யார்தான் அழகால் மயங்காதவரோ! (பிருந்தா)

புல்லாங் குழலிசை இனிமையினாலே
உள்ளமே ஜில்லெனத் துள்ளாதோ
ராகத்திலே அனுராகமேவினால்
ஜகமே ஊஞ்சலில் ஆடாதா ! (பிருந்தா)

கண்ணனின் உன்னத லீலையை நினைத்தால்
தன்னையே மறந்திடச் செய்யாதோ !
ஏனோ ராதா இந்தப் பொறாமை
யார்தான் அழகால் மயங்காதவரோ !

திறன்களும் பாட எண்களும்

திறன் பகுதி	திறன்கள்	பாடஎண்
கேட்டல்	1. எளிய மற்றும் அறிமுகமான மழலைப்பாடல் புரிந்து கொள்ளுதல்.	1,4,14,
	2. அறிமுகமான சூழ்நிலைகளில் அமையும் உரையாடல்கள் மற்றும் கலந்துரையாடல்களைப் புரிந்து கொள்ளுதல்.	6,10,15,
	3. அறிமுகமான சூழ்நிலைகளில் அமையும் குறிப்புகள், வாய்மொழிக் கட்டளைகள் மற்றும் வினாக்களைப் புரிந்து கொள்ளுதல்.	16,21,23,24
	4. பாடத்திலிருக்கும் நிகழ்வுகளை வரிசைப் படுத்தி நினைவு கூர்தல்	2,8,11
	5. கேட்டபின் ஏன் ? எப்படி ? எதற்கு ? போன்ற வினாக்களை விடுத்து பின் விடையளித்தல்	1,13,19
பேசுதல்	1. எழுத்துக்களைச் சரியான ஒலியுடன் ஒலிக்கச் செய்தல்	7,9,17
	2. பாடல் மற்றும் பாடப் பகுதியைக் குழுவினருடனும் தனியாகவும் கூறுதல்	1,2,12
	3. எளிய வினாக்களுக்கு முழுமையாக விடையளித்தல்	13,16,17
	4. அறிமுகமான பொருட்களைப் பற்றிய செய்திகளைக் கேட்டல்	5,14,23
	5. பணிவுடன் பேசும் திறன்.	19,20,22,24

NOT TO BE REPUBLISHED © KTBS

திறன் பகுதி	திறன்கள்	பாடஎண்
படித்தல்	1. எழுத்துக்களை அடையாளம் காணுதல் எழுத்துக்களைத் தனியாகவும். சொற்களில் அமையும் அவ்வெழுத்துக்களையும் அடையாளம் காணும் திறன்	9,18
	2. பெரிய மற்றும் சிறிய அச்சு எழுத்துக்களைப் படித்தல்	10,13
	3. மூன்று எழுத்து முதல் ஐந்து எழுத்துக்கள் கொண்ட சொற்களைப் படித்தல்	18,20
	4. ஏறக்குறைய இரண்டாயிரம் சொற்களைப் படித்தல்	6,13,20
எழுதல்	1. வரியொற்றி எழுதும் பயிற்சித் திறன்	9,10,21
	2. கேட்டு எழுதுதல் மூலம் உயிர் எழுத்து, மெய்யெழுத்துக்களை எழுதுதல் மற்றும் அறிமுகமான சொற்களை எழுதுதல்	3,6,10,12
	3. குறிப்புகளைப் பின் பற்றி எளிய வாக்கியங்களை எழுதும் திறன்	5,8,11
	4. கொடுக்கப்பட்ட சொல்லின் முதல் மற்றும் இறுதி எழுத்துக்களைச் சேர்த்து புதிய சொல்லை உருவாக்குதல்	3,13

@KTBS NOT TO BE REPUBLISHED